# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

******

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

முறையீட்டு மனு எண்.42/2018/பே
ஆணை நாள்: 01–10–2018

திரு R. பழனிச்சாமி,
த/பெ திரு. ராஜகோபால்,
186, கிழக்குத் தெரு,
அரவக்குறிச்சி,
கரூர் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அரவக்குறிச்சி பேரூராட்சி,
கரூர் மாவட்டம். -- எதிர் மனுதாரர்

ஆணை.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பேரூராட்சி, 186, கிழக்குத் தெருவினைச் சேர்ந்த திரு. R. பழனிச்சாமி, த/பெ திரு.ராஜகோபால் என்பவரது 13.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2018ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 042/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், அரவக்குறிச்சி பேரூராட்சி மூலம் தனது வீட்டின் வாயிற்படியில் நிறுவப்பட்டுள்ள குடிநீர்த் தொட்டியினை பொது இடத்திற்கு மாற்றி அமைக்கக் கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 13.03.2018 நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து, அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 23.03.2018 நாளிட்ட விளக்க அறிக்கையில், அரவக்குறிச்சி பேரூராட்சி பகுதியில் எஸ்.ஆர்.ஓ. தெரு, பெருமாள் கோவில் அருகில் 2010–11 ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்படி தெரு பொதுமக்களின் குடிநீர் பிரச்சினையினை தீர்க்க பேரூராட்சி சாலை ஓரத்தில் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கப்பட்டதாகவும், அத்தொட்டியில் இருந்து கிடைக்கும் குடிநீரை சுமார் 50 குடும்பங்கள், மற்றும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களும்,

பெரியகடை வீதியில் அமைந்துள்ள வணிக கடை உரிமையாளர்களும், கடைகளில் பணிபுரியும் பணியாளர்களும் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் பேரூராட்சி அலுவலகத்தினை நேரடியாக அணுகி இக்குடிநீர் தொட்டியானது தனது வீட்டிற்கு இடைஞ்சலாக உள்ளதாக தெரிவித்ததையடுத்து, மேற்படி கோரிக்கை தொடர்பாக தல ஆய்வு மேற்கொண்டதாகவும், அத்தொட்டி அந்த இடத்தில் அமைக்கப்படும்போது, அந்த இடம் மேற்படி முறையீட்டு மனுதாரருக்கு சொந்தமாக இருக்கவில்லை எனவும், மேற்படி தொட்டி 2010–11 ஆண்டில் கட்டப்பட்டபின்னர், முறையீட்டு மனுதாரர் அந்த இடத்தினை 2017–ல் தான் வாங்கியுள்ளதாகவும், மேலும் அத்தொட்டியினை மாற்றியமைப்பதினால் பொதுமக்கள் மூலம் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக மேற்படி தொட்டியினை முழுமையாக அகற்ற இயலாத நிலையில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையின்படி,

(1) ஆழ்குழாயினை தரைக்கு வெளியே உள்ள பகுதியினை தரைமட்டத்திற்கு கீழாக தொட்டி அமைத்து குழாயின் உயரத்தை குறைத்து அமைக்கப்பட்டுள்ளதாகவும்,

(2) மோட்டாரை இயக்கும் ஸ்டார்டர் போர்டு இடம் மாற்றி அமைக்கப்பட்டு, சின்டெக்ஸ் தொட்டி அருகிலேயே பொருத்தப்பட்டுள்ளதாகவும்,

(3) மின் இணைப்பு பெற நடப்பட்ட கம்பம் சின்டெக்ஸ் தொட்டி அருகிலேயே மாற்றி நடப்பட்டு மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதாகவும்,

(4) குடிநீர் பிடிக்கும் குழாய்கள் வேறு பக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி நடவடிக்கைகளின் காரணமாக முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்கு முன் பக்கம் தற்போது 15 அடி இடைவெளி உள்ளதாகவும், அதே வேளையில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் ஆழ்குழாய் மற்றும் பேனல் போர்டு மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாகவும், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 26.04.2018 நாளிட்ட அறிவிப்பாணையில், அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் 23.03.2018–ஆம் நாளிட்ட விளக்க அறிக்கையின் நகலினை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் மீதான தனது ஆட்சேபணை/விளக்கத்தினை 10 தினங்களுக்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 01.06.2018 நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பாக தங்களது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 19.07.2018ல் ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர் மற்றும் அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தில் 19.07.2018ல் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.R பழனிச்சாமி தனது விளக்கத்தில் "...... தான் மேற்படி இடத்தில் இருந்த வீட்டினை இடித்து, காலி மனையினை 2017ல் வாங்கியதாகவும், தான் நிலத்தினை வாங்குவதற்கு முன்பே குடிநீர் தொட்டி இருந்ததாகவும், முதலில் மீட்டர் பெட்டி தன் வாசலுக்கு அருகில் இருந்ததாகவும், தற்போது அதனை இடம் மாற்றியுள்ளதாகவும், மோட்டார் பைப் உயரம் குறைத்துள்ளதாகவும், பைப் ஏற்கனவே இருந்த இடத்திலேயே இருப்பதாகவும், இத்தொட்டி மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளவர்களோ, பெரிய கடை வீதியில் உள்ளவர்களோ அத்தொட்டி நீரை பயன்படுத்துவது இல்லை எனவும், சார்பதிவாளர் அலுவலகம் அருகில் வேறொரு தொட்டி உள்ளதாகவும், பேரூராட்சி செயல் அலுவலரிடம் மனு கொடுத்தவர்கள்

அந்த பகுதியினை சார்ந்தவர்கள் இல்லை எனவும், குடிநீர் தொட்டி உள்ள இடம் தனது படுக்கை அறையினை ஒட்டியுள்ளதாகவும், மேற்படி தொட்டி நீரை இப்பகுதியில் உள்ள 3 குடும்பங்கள் மட்டுமே பயன்படுத்தி வருவதாகவும், இது சம்பந்தமாக முன்னாள் 14–வது வார்டு உறுப்பினர் கொடுத்துள்ள 19.07.2018 நாளிட்ட கடிதத்தினையும் சமர்ப்பிப்பதாகவும், தனக்கு இடையூறாக உள்ள சின்டெக்ஸ் தொட்டியினை இடம் மாற்றி அமைக்கவேண்டுமென தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தில் 19.07.2018 அன்று ஆஜரான அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ச.ஹரிராமமூர்த்தி தனது வாக்குமூலத்தில் "......முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள சின்டெக்ஸ் குடிநீர் தொட்டி 2010–ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து அமைக்கப்பட்டதாகவும், இக்குடிநீர் தொட்டியிலிருந்து கிடைக்கும் குடிநீர் சுமார் 50 குடும்பங்களுக்கும், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திர பதிவு செய்ய வரும் பொதுமக்கள் மற்றும் பெரிய கடை வீதியில் அமைந்துள்ள கடைகளில் பணிபுரியும் பணியாளர்களும் பயன்படுத்தி வருவதாகவும், குடிநீர் தொட்டி அமைக்கப்படும்போது இந்த இடம் முறையீட்டு மனுதாருக்கு சொந்தமானதாக இல்லை எனவும், 2017–ஆம் ஆண்டில்தான் ஆவண எண்.2219/2017ன்படி கிரயம் பெற்றுள்ளதாகவும், அவர் கிரயம் பெறுவதற்கு சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னரே இக்குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் கட்டிடம் கட்ட 29.12.2017ல் தான் அனுமதி பெற்றதாகவும், கட்டிடம் கட்ட பெறப்பட்ட அனுமதியினை விட அதிக அளவில் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டியுள்ளதாகவும் தற்போது முறையீட்டு மனுதாரரின் முறையீடு தொடர்பாக கீழ்க்கண்டவாறான சில நடவடிக்கைகளை நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

1. ஆழ்குழாய் கிணறு குழாய் தரைக்கு வெளியே உள்ள பகுதியில் தரைமட்டத்திற்கு கீழ் குழாய் உயரத்தை குறைத்து போடப்பட்டுள்ளதாகவும்.
2. மோட்டாரை இயக்கும் பேனல் போர்டு இடம் மாற்றி அமைக்கப்பட்டு முறையீட்டு மனுதாருக்கு சாதகமாக செய்யப்பட்டுள்ளதாகவும்.
3. மின் இணைப்பு பெற நடப்பட்டுள்ள கம்பம் மாற்றி நடப்பட்டு மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதாகவும்.
4. குடிநீர்க் குழாய்கள் வேறு பக்கத்திற்கு மாற்றப்பட்டதின் மூலம் முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்கு முன்பு தற்போது 15 அடி அகலத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் ஆழ்குழாய் பேனல் போர்டு மற்றும் கம்பம் மாற்றி அமைக்கப்பட்டு முறையீட்டு மனுதாருக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாமல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள், தனி நபருக்கு சாதகமாக செயல்படுவதாக தன்னை சுற்றி வளைத்துக் கொண்டதாகவும், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை ஓரளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், இன்னும் குடிநீர் தொட்டியினை மாற்றி அமைத்தால் பொதுமக்களுடைய எதிர்ப்பிற்கு ஆளாக நேரிடும் எனவும் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய அளவில் மாற்றுவதற்கு வேறு பொதுவான இடங்கள் இல்லாததால், முறைமன்ற நடுவ விசாரணையின்போது ஆணையிட்டவாறு முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தினை

நேரில் தல ஆய்வு மேற்கொண்டு விசாரணையில் விவாதித்த நிகழ்வுகளின் அடிப்படையில் தனது அறிக்கையினை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 31.07.2018 நாளிட்ட கடிதத்தில், 19.07.2018 நாளிட்ட விசாரணையில் தெரிவித்துள்ளவாறு முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து தல ஆய்வு மேற்கொண்டு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில்:-

(1) குடிநீர்த் தொட்டியினை முழுமையாக அகற்ற இயலாத சூழ்நிலை உணரப்பட்டதாகவும்;

(2) முறையீட்டு மனுதாரர் மேற்படி இடத்தில் கட்டிடம் கட்ட பேரூராட்சி கட்டிட உரிமம் எண். 65/2017–18, நாள்.21–12–2017ல் பெற்றுள்ளதாகவும், தரை தளத்திற்கு மட்டுமே கட்டிட உரிமம் பெற்ற நிலையில் முதல் தளமும் கட்டி வருவதாகவும்;

(3) ஆழ்குழாயின் தரைக்கு வெளியே உள்ள பகுதியினை தரைமட்டத்திற்கு கீழாக தொட்டி அமைத்து குழாயின் உயரத்தை குறைத்து அமைக்கப்பட்டுள்ளதாகவும்;

(4) மோட்டாரை இயக்கும் ஸ்டார்டர் போர்டு மாற்றி அமைக்கப்பட்டு சின்டெக்ஸ் தொட்டி அருகிலேயே பொருத்தப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் குறைந்தது 20அடி நீளத்திற்கு வாசல் முகப்பிற்கும் குடிநீர் தொட்டி அமைவிடத்திற்கும் இடைவெளி உள்ளதாகவும்;

(5) குடிநீர் பிடிக்கும் குழாய்கள் வேறு பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இது குடிநீர் தொட்டி அமைக்கும்போதே தற்போது உள்ளபடிதான் அமைக்கப்பட்டிருந்ததாகவும் வேறு மாறுதல்கள் செய்யப்படவில்லையெனவும்;

(6) மேற்கண்ட நடவடிக்கைகள் காரணமாக முறையீட்டு மனுதாரரின் வீட்டின் முன்பு பாதிப்பாக உள்ளது என கூறப்பட்ட இடத்தில் தற்போது 20 அடி நீளத்திற்கு எவ்விதமான இடையூறுமின்றி ஆழ்குழாய், ஸ்டார்டர் போர்டு மற்றும் கம்பம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் முன்னாள் பேரூராட்சி உறுப்பினர் திரு.பெ.ஜோதிரத்தினம் என்பவர் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் மேற்படி ஆழ்குழாய் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரும்போதும், அமைக்கப்பட்ட போது திரு.பெ.ஜோதிரத்தினம் என்பவர் பேரூராட்சியில் 14–வது வார்டு உறுப்பினராக இருந்ததாகவும், பேரூராட்சி மன்ற தீர்மான எண். 317/நாள். 31.08.2010ல் தீர்மானம் நிறைவேற்றும்போதும், குடிநீர்த் தொட்டி அமைக்கும் போதும் அவர் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கவில்லை எனவும், பேரூராட்சியின் பல பகுதிகளில் சின்டெக்ஸ் தொட்டிகள் பேரூராட்சியின் பாதைகளிலும், குடியிருப்பு வீடுகளின் அருகிலும், சுவரோரங்களிலும், மற்றும் முகப்பு பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குடிநீர் தொட்டியினை முழுவதுமாக மாற்ற இயலாத நிலை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் செயல் அலுவலரின் நேரடி வாக்குமூலம் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் கூடுதல் தல ஆய்வு அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் வீடு கட்ட மனையினை வாங்கும் முன்னரே மேற்படி குடிநீர்த் தொட்டி நிறுவப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டினைபடுத்து மேற்படி குடிநீர் தொட்டியினை ஓரளவிற்கு மாற்றியமைத்ததின் மூலம் முறையீட்டு மனுதாரரின் வாசல் புறத்தில் 20அடிக்கான இடம் எவ்வித இடையூறும் இன்றி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து மேற்படி தொட்டியினை முழு அளவில் மாற்ற இயலாத நிலையினையும் பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்தான தொடர் நடவடிக்கைகள் கைவிடப்படுகிறது. மேலும், முறையீட்டு மனுதாரரால் வீடு கட்ட பெறப்பட்ட அனுமதியினை விட கூடுதலாக கட்டப்பட்டு வரும் கட்டிடம் தொடர்பாக உரிய சட்ட விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலருக்கு தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 01–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

26/10/2018

26/10/18

பெறுநர்

1.திரு R. பழனிச்சாமி,
த/பெ திரு. ராஜகோபால்,
186, கிழக்குத் தெரு,
அரவக்குறிச்சி,
கரூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
அரவக்குறிச்சி பேரூராட்சி,
கரூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திண்டுக்கல் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல்.